**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.137/2022**

பெயர்-திரு. மல்லப்பா நாள்.18.11.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**(சாட்சிக்கு கன்னடம் மொழி மட்டுமே தெரியும் என்பதால் கன்னடம் மொழிப் பெயர்பாளராக வழக்கறிஞர் திரு.C.K.ரமேஷ் நியமிக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்பட்டார்.)**

1) போலப்பாவின் மகன் நான்தான் என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் என்றால், பட்டா தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.1** பட்டாவில் போலப்பாவின் மகன் மல்லப்பா என காட்டப்படவில்லை என்றால், சரிதான். எனது அப்பாவின் பெயர் போலப்பா என கண்டுள்ளது. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் நானும் ஒரு தரப்பினராக உள்ளேன் என்றால், சரிதான். நானும், எனது மக்களும் கையொப்பம் செய்துள்ளோம். வா.சா.ஆ-2 ஆவணத்தில் சொத்து சம்மந்தப்பட்ட சர்வே எண் கொண்ட பட்டா இணைக்கப்பட்டுள்ளதா என்றால், இணைக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவா சொத்து சம்மந்தமாக சர்வே எண்ணின், பட்டா, கந்தாய ரசீது, போன்றவை இணைக்கப்பட்டுள்ளதா என்றால், இணைக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக பழைய புல எண்கள் தெரியுமா என்றால், பழைய புல எண்.163/2 ஆகும். தாவா சொத்திற்கு உண்டான தற்போதைய கணினி வழி பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அது நிபந்தனை பட்டா என்பதால், பெற முடியவில்லை. எனது தந்தை போலப்பா 1995-ல் காலம்சென்றுள்ளார். எனது தந்தையின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வழக்குரையில், எனக்கும் அங்கஞ்செட்டி வாரிசுகளான பிரதிவாதிக்கும் என்ன முன் விரோதம் இருந்தது என்றால், தாவா சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என கேட்டதால், முன்விரோதம் ஏற்பட்டது.

2) வழக்குரையில் 22.07.2022-ம் தேதியன்று பிரதிவாதிகள் தாவா சொத்தில் உழவு செய்ய சென்ற டிராக்டரை தடுத்ததாக தாளவாடி காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வழக்கு சொத்திற்கு எனது தந்தையின் பெயரில் ஆரம்ப காலத்தில் இருந்து தற்போது வரை செலுத்திய கந்தாய ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வா.சா.ஆ.4 -2018-ல் செலுத்திய கந்தாய ரசீது செலுத்திய போது, எனது அப்பா

போலப்பா உயிருடன் இல்லை என்றால், சரிதான். ஆனாலும் கந்தாய ரசீது எனது தந்தையின் பெயரில்தான் செலுத்தி வருகிறேன். வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள இரண்டு பட்டா எண்களான 444 மற்றும் க.28 ஆகியவற்றில், தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், க.28-ற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.163/2-ல் நான் விவசாயம் செய்து வருகிறேனா என்றால், இல்லை. யானை பயத்தால் விவசாயம் செய்யவில்லை. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளதா என்றால், உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 அடங்கல் பதிவேடு ஆவணத்தில் 2021 காலகட்டத்திற்கான ஆண்டுக்குத்தான் அடங்கல் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். எனது தந்தை காலத்திற்கான அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வீட்டில் இருக்கும், தேடிப் பார்க்கிறேன். வா.சா.ஆ-5 -ல் எனது அப்பா பெயருடன் மற்றும் சிலர் பெயர் உள்ளதாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.18 16:25:11 +0530

District Munsif